# சூத்திரம்

www.sooddram.com

The Formula



## 1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

***நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 32)***

(கிறேசியன், நாவாந்துறை)

2002 முதல் 2006 வரை ஒரு கோமாளித்தனமான ஆட்சியை நடத்தினார்கள் வன்னியில் புலிகள். யாழ்ப்பாணம் செல்லும் மக்களிடம் வரி அறவிட்டனராம். அது வரியல்ல வழிப்பறி. அந்தக் காலத்தில் நடைப்பயணம் போவோரிடத்தில் வழிப்பறி செய்வார்கள் கொள்ளையர்கள். அது போன்றதோர் கொள்ளையை 21ம் நூற்றாண்டில் செய்தனர் புலிகள். இந்தக் கொள்ளையை யாழ்ப்பாணத் தமிழர்களிடத்தில் அடித்தனர். தமிழரிடம் கொள்ளை அடிக்க சிங்கள அரசிடம் அனுமதி கேட்டனர் புலிகள். 150 ரூபா அலுமினியப் பானைக்கு 250 ரூபா வழிப்பறி வரி போட்டவர்கள் புலிகள்.

இவர்கள் ஏனைய இயக்கங்களை அழிக்க இலங்கை இராணுவம் இவர்களை ஒட்டுமொத்தமாக அழித்தது. அப்படி அழிக்கப்படும் போது உலகம் முழுவதும் பார்த்துக்கொண்டிருந்தது. இவர்கள் யாருக்கும் தெரியாமல் வதை முகாம்களில் வைத்துக் கொன்றனர் தமிழர்களை. இவர்களை படம் போட்டுக்காட்டிக் கொன்றனர் எதிரிகள்! இவர்கள் ஒரு கணக்குப் போட, கடவுள் வேறு கணக்குப் போட்டு வைத்திருந்துள்ளார் என்பதுதான் உண்மை!

என்னை இருபாலை காம்புக்குக் கொண்டு வந்து 15 மாதங்கள் கடந்து விட்டன. எங்களுக்கு திகதி நாள்காட்டி கிடையாது! பத்திரிகை கிடையாது. அன்று என்ன கிழமை என்று கூடத்

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்.......**

---



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**“அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

ஈழச் சுவர்
தமிழ் நியூஸ் வெப்
பத்மநாபா
மலையகம்
பார்வை
அலை
தாயகம்
ஈழநாசம்
நெருப்பு
அதிரடி
அதிரடி மீடியா
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
ஆனந்தசங்கரி
விழிப்பு
ரெலோ நியூஸ்
உதயம்
தேனகம்
புளொட்
ஈபிஆர்எல்எவ் வெப்
விடிவெள்ளி
எங்கள் பூமி
இலங்கை கம்யூனிஸ்ட்
எங்களைப்பற்றி
General

தெரியாதிருந்தது. புதிதாக வருபவர்களிடம்தான் கிழமை திகதியைக் கேட்டுத் தெரிந்துகொள்வோம். அதனைக் கேட்டு தெரிந்து கொண்டும் எந்தவித நன்மையும் எட்டப் போவதில்லை.

இருபாலை முகாமைப்பற்றி வெளியிலிருக்கும் மக்கள் பரவலாக கதைக்கத் தொடங்கிவிட்டனர். இங்கே இளைஞர்களைக் கொண்டு வந்து கொலை செய்கிறார்கள் என்பது அச்செய்தியாகும். இச் செய்தி புலி விலங்குகளை எட்டியது. எனவே இந்த இடத்தை மாற்ற வேண்டும் என்ற முடிவை எடுத்தனர்.

ஒரு நாள் ஞாயிறன்று பிற்பகலில் எல்லாரும் தயாராகுங்கள் என்று கூறினர். நாங்கள் தயாராக வேண்டியதற்கு எதுவும் இல்லை. அதே கிழிந்த சறம், சேட் கிடையாது, அண்டவெயர் கிடையாது, கால்களில் சங்கிலி விலங்கு இவற்றுடன் ஆதிவாசிகள் போன்று அனைவரும் எழுந்து நின்றோம். நாங்கள் எழுந்து நின்றது மட்டும்தான் எங்களது தயாரிப்பு! இரவு ஏழு மணி வரை நின்று கொண்டே இருக்கிறோம், எதற்காக தயாராகுங்கள் என்று கூறினார்கள் என்பது தெரியாது. இறச்சிக்கடைக்கோ, அல்லது துணுக்காய்க்கோ அல்லது விடுதலைக்கோ என்பது எங்களுக்குத் தெரியாது.

இரவு எட்டுமணியளவில் 20 க்கும் மேற்பட்ட விலங்குகள் வந்தனர். கறுப்புத் துணிகளால் கண்களைக் கட்டினர். பத்துப்பேர் ஏற்றக்கூடிய வாகனம் ஒன்றில் ஏற்றினர். வான் புறப்பட்டது. அரை மணி நேர ஓட்டத்திற்குப் பின்னர் ஓர் இடத்தில் நிறுத்தி இறங்கும்படி கூறினர், இறங்கினேன், கண்களின் கட்டுக்களை அகற்றினர், நடவுங்கள் என்றனர், நீளமாகக் கட்டப்பட்ட அறைகளைக் கொண்ட அந்த இடம் ஓர் சிறை என்பதைத் தெரியப்படுத்தியது.

எழு முதல் எட்டு அறைகள் கொண்டதாக இருந்தது. ஒரு அறையில் இருப்பவர்கள் மற்ற அறையைப் பார்க்க முடியாது தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. அறையினுள்ளேயே கழிவறை கட்டப்பட்டிருந்தது. அதனால் கைதிகள் வெளியே வரவேண்டிய அவசியம் இருக்காது. உள்ளே போனால் போனதுதான், அடுத்த ஒரு மணி நேரத்தில் மேலும் பத்துப் பேர்வரை கொண்டு வரப்பட்டனர் இருபாலையிலிருந்து.

அனைவரையும் ஒரே அறையில் போட்டுப் பூட்டினர். மறுநாள் காலையில் எழுந்ததும் அது எந்த இடம் என அடையாளம் காண்பதில் பல முயற்சிகள் செய்தும் பயனற்றுப் போனது. அந்த அறையிலிருந்து எந்த வெளிப்பகுதியையும் பார்க்க முடியாது இருந்தது. புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடம்தான்.

காலையில் இடியாப்பப் பார்சல் வழங்கப்பட்டது.

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………"

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E'smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.'s beck and call.

From: Broken Palmyra

***இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்!***
**நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?**

(சாகரன்)

உண்டபின் கம்பிக் கதவருகில் நான் இடம் பிடித்துக்கொண்டேன். வருவோர் போவோரை என்றாலும் பார்க்கலாம் என்ற நப்பாசையில் இடம் பிடித்து அமர்ந்தேன், 11மணியளவில் இரண்டு புலிவிலங்குகள் வந்து என்னுடைய இலக்கத்தையும் மேலும் இருவரது இலக்கத்தையும் அழைத்தனர்.

அலுவலகம் என்று சொல்லப்பட்ட இடத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கே ஓர் வெள்ளைத் தாளில் எழுதச் சொன்னனர். விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராகச் செயல்பட மாட்டேன், ஈ.என்.டி.எல்.எப் இயக்கத்தில் இணைந்து செயல்படமாட்டேன், இது மட்டுமல்லாமல் எந்தவித அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டேன் என்றும் உறுதியளித்து கையொப்பமிடச் சொன்னார்கள், கையெழுத்திட்டேன்.

பின்னர் வேறு ஓர் வெள்ளைப் பேப்பரில் எனது விரல் அடையாளங்களையும் உள்ளங்கை அடையாளங்களையும் பதிந்து எடுத்தனர். பின்னர் மீண்டும் சிறை அறைக்குக் கொண்டுச் சென்றனர். இப்போது நானும் மற்றைய இருவரும் விடுதலை செய்யப்படுவோம் என்று நினைத்து உள்ளே இருப்பவர்களுடன் கதைக்கலானேன். அவர்களது வீடுகளுக்குச் சென்று சொல்கிறேன் என்று கூறி அன்று முழுவதும் காத்திருந்தோம். எந்தத் தகவலும் இல்லை.

இரவானதும் புட்டுப் பார்சல் சாப்பிட்டுவிட்டு உறங்கச் சென்றோம். இரவு பத்துமணிக்கு மேல் மூன்று நான்கு பேர் எங்கள் அறையின் அருகில் வந்து பார்த்தார்கள். பின்னர் மறுபுறம் சென்றார்கள் அதில் வெள்ளையாக மீசை இல்லாமல் ஒருவரும் இருந்தார். அவர்கள் சென்றதும் அருகில் இருந்த ஒரு சகோதரர் கேட்டார் அந்த உயர்ந்த ஆள் யார் என்று தெரியுமா என்றார்! தெரியாது என்றேன், அவன்தான் பொட்டன் என்றார். ஓஹோ! இவர்தான் இந்தக் கொடிய சித்திரவதை விலங்குகளின் தலைவனோ! எங்கள் தமிழ் இளைஞர்களுக்கு இவர்கள் செய்துவிட்ட கொடுமைகள் இவரைச் சும்மா விடாதே என்று அப்போது மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

இரண்டு நாட்கள் கடந்தன. மூன்றாம் நாள் இரவு ஏழுமணியளவில் துணுக்காயில் இருந்த வான்மீன் வந்தார். அவருடன் மேலும் இருவர் வந்தனர். என்னை வெளியில் அழைத்தனர். எனது கால்விலங்கில் பூட்டப்பட்டிருந்த பூட்டுக்கள் இரண்டையும் கழற்றினர். இப்போதும் நான் எனது கிழிந்த சறத்துடன்தான் இருந்தேன். இருப்பத்தி இரண்டு மாதங்களுக்கு முன்னர் என்னிடமிருந்து எடுத்த எனது சேட்டையும், நான் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் கொடுத்தனர். எனது அறைக்கு அடுத்த அறியிலிருந்த ஒருவரிடமிருந்து சறம் ஒன்றினை வாங்கித் தந்தார் வான்மீன். சறம் கொடுத்தவரை பார்த்து நன்றி சொல்ல இவர்கள்


வெல்லப்போவது யார்.....? பாராளுமன்றத் தேர்தல் 2010

(சாகரன்)

*பாராளுமன்றத் தேர்தல் 2010*

தேர்தல் விஞ்ஞாபனம் - *பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி*

1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

*நடந்த வன்கொடுமைகள்!*
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

*“ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்.”*
**வெகு விரைவில்...**

மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்

(சாகரன்)

*இலங்கையில்*

‘இராணுவ’ ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்

(சாகரன்)

*ஜனாதிபதி தேர்தல்*

எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

*ஜனாதிபதித் தேர்தல்*

ஆணை இட்ட அதிபர் ‘கை’, வேட்டு வைத்த

அனுமதிக்க வில்லை.

முன்னர் போன்று கசங்கிய சேட்டுடன் புறப்பட்டேன். அறையில் இருந்தவர்களிடம் விடைபெற்று வாசலுக்கு வந்ததும் மீண்டும் எனது கண்களைக் கட்டினர். வான்மீன் தனது சைக்கிளின் முன்புறத்தில் என்னை ஏற்றினார். சைக்கிள் பயணம் அரை மணித்தியாலத்தை தாண்டியது. இந்த அரைமணி நேரமும் அவர் ஏதோ இயக்கப்பாடலும் சினிமாப் பாடலும் கலந்து பாடிக் கொண்டே சைக்கிளை மிதித்துக் கொண்டு வந்தார். துணுக்காயில் சித்திரவதை செய்பவர்களின் தலைவனாக இருந்த வான்மீன், இப்போது என்னைச் சைக்கிளில் ஏற்றி பாட்டுப்பாடி மிதித்துக்கொண்டு வருகிறார். பதவி இறங்க என்ன காரணம்? கேட்கவா முடியும்!

ஓர் வீட்டின் முன் நிறுத்தி இறங்கும்படி கூறிய அவர் உள்ளே அழைத்துச் சென்றார். கண்கட்டை அகற்றினார். அந்த இடம் நல்லூர் சங்கிலியன் வீதியில் இருந்த அதே முகாம். அங்கும் வேறு சிலரை வைத்திருந்தனர். அவர்களுடன் எதுவும் கதைக்கக் கூடாது என்று கூறினார் வான்மீன். அந்த முகாமின் பொறுப்பாளராக முதலில் இருந்த அதே சூட் தான் இப்போதும் இருந்தார்.

அந்த வீட்டின் வெளி வராந்தையில் படுக்கச் சொன்னார்கள். இரவு 11மணியளவில் இரண்டு பேர் வந்தனர். இவனை ஏன் வெளியில் படுக்கவைத்துள்ளீர்கள், வெளியில் ஆம்ஸ் இருக்கு, உள்ளே படுக்கவையுங்கள் என்றனர். பின்னர் உள்ளே படுக்கவைத்தனர். உள்ளே ஆறு ஏழுபேர்வரை இருந்தனர். அவர்களிடமும் என்னுடன் கதைக்கக் கூடாது என்று கூறிவிட்டுச் சென்றனர்.

காலை 8.30 மணிக்கு என்னை அழைத்து நீங்கள் போகலாம், இனிமேல் எந்த இயக்கத்துடனும் தொடர்பு வைக்கக் கூடாது, தெரிய வந்தால் மண்டையில் போட்டுவிடுவோம் என்று சூட் கூறினார். விட்டால் போதும் என்று வெளியே வந்தேன். எனது வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தேன். அங்கிருந்து எனது வீடு மூன்றரை முதல் நான்கு கிலோ மீற்றர் வரும், கால்விலங்குகள் கழற்றப்பட்டதால் ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. எவ்வளவு தூரத்துக்கு எனது கால்களை எட்டி வைக்க முடியுமோ வைத்தேன்.

எதற்காக என்னைப் பிடித்து சித்திரவதை செய்தார்கள்? எதற்காக விடுவிக்கிறார்கள்? முட்டாள்களின் ஆட்சியில் இவை எல்லாம் நடக்கும் போலும் என்று நினைத்துக் கொண்டு ஆரியகுளம் வழியாக ஸ்ரான்லி வீதியில் நடக்கலானேன். மனித உறவுகள் நினைவிருக்கும் வரைதான்! மறதி பல நன்மைகளை மனித குலத்துக்குச் செய்துள்ளது. என்னுடன் இருந்தவர்களில் ஏனைய அனைவரையும் இறச்சிக்கடைக்குக் கொண்டு சென்றார்கள். அவர்கள் இப்போது என்னவிதமான சித்திரவதைகளை


**ஜெனரல் 'துப்பாக்கி' ….. யார் வெல்வார்கள்?**

(சாகரன்)

**சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.**

(சேகர்)

**அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.**

(அ. வரதராஜப்பெருமாள்)

***தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு***

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?**

(சாகரன்)

***ஜனவரி இருபத்தாறு!***

**விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்…..?**

(மோகன்)

**2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!**

***'ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்'***

(சாகரன்)

***சபாஷ் சரியான போட்டி.***

**மகிந்த ராஜபக்ஷ Vs சரத் பொன்சேகா.**

(யஹியா வாஸித்)

**கூத்தமைப்பு**

அனுபவிக்கிறார்களோ தெரியாது. நான் வீடு நோக்கி நடக்கிறேன்.

காலையில் வருவோர் போவோர் பற்றிய எந்த எண்ணமும் எனக்கிருக்க வில்லை, இருபாலை, இறச்சிக்கடை, புலி விலங்குகளது கொடுமை, எனது வீடு இவை பற்றியே எனது எண்ணங்கள் இருந்தன. எனக்கும் ஏனையோருக்கும் நடந்தவை போன்று தொடர்ந்தும் நடக்கத்தான் போகிறது. இதை எப்படி நிறுத்துவது. ஒன்றில் இன்னும் ஓர் இயக்கம் வளர்ந்து வரவேண்டும், அல்லது இந்தியா வரவேண்டும் அல்லது இலங்கை அரசு இவர்களைப் பிடிக்க வேண்டும். இலங்கை அரசு பிடித்தால் சித்திரவதை நிற்கலாம், உரிமைகள் பறிபோய்விடும்! எனவே இலங்கை அரசு பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் சரியானதல்ல!

பிறிது ஓர் இயக்கம் மக்களையும் உரிமைகளையும் மதிக்கக் கூடியதாக வளர்ச்சிப்பெற்று வரவேண்டும். அல்லது இந்தியா தனது உறுதிப்படி மீண்டும் வந்து மாநிலத்திற்கான அரசை ஏற்படுத்தி ஓர் நிர்வாகத்தை வகுத்து வழங்கவேண்டும் அல்லது ஐக்கிய நாடுகள் சபை எங்கள் பகுதிக்கு வந்து பிரச்சினைகளைத் தீர்த்து எங்கள் உரிமைகளை மீட்டு நிர்வாகத்தினை ஏற்படுத்த வேண்டும். இவை எதுவானாலும் ஒன்று நடந்தால்தான் தமிழர்கள் அச்சமின்றி வாழ முடியும், அதுவரை என்ன செய்வது? என்ற யோசனையுடன் எனது வீட்டு வாசலை அடைந்தேன்.

எனது மூத்த சகோதரிகள் என்னைக் கண்டதும் கட்டித் தழுவி அழுது வடிந்து பெரிய பிரளயத்தையே ஏற்படுத்தினர். நான் கொல்லப்பட்டுவிட்டேன் என்று பலரும் கூறியிருந்தனராம். ஆனால் சறம் கொடுக்கும் சம்பிரதாயம் நடைபெறாதபடியால் அவர்களுக்கு ஓர் நம்பிக்கை இருந்துள்ளது, நான் உயிருடன் இருப்பேன் என்று!

உலகத்தில் எந்த நாட்டிலாவது ஒருவர் கைது செய்யப்பட்டால், அவரது வீட்டுக்குத் தகவல் தெரிவிப்பார்கள், கடிதம் எழுத அனுமதிப்பார்கள், தொலை பேசி வசதிகூட செய்து கொடுப்பார்கள். உறவினரைப் பார்ப்பதற்கு அனுமதிப்பார்கள். ஆனால் சுதந்திரத்துக்காகப் போராடிய புலி விலங்குகளது ஆட்சியில்தான் தமிழ் இனத்தின் உரிமைகள் கால்களில் போட்டு மிதிக்கப்பட்டன.

பிடித்துச் செல்லப்பட்டவர்கள் உயிருடன் இருக்கின்றனரா இல்லையா என்று கூட தெரியாத நிலையில் அவர்களது உறவினர்கள் அலைவார்கள். அதைக் கண்டு ரசிப்பார்கள் புலிகள். விடுதலை கேட்டோம் சிங்கள ஆட்சியாளரிடமிருந்து, உயிர்ப்பிச்சை கேட்டனர் தமிழர்கள் புலி விலங்குகளிடமிருந்து! அப்படி ஓர் ஆட்சியை நடத்தி, இறுதியில் தமிழர்களை பலி கொடுத்தனர்


**கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!**

(சதா. ஜீ.)

***தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை***

**மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?**

(சாகரன்)

**கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்**

(சாகரன்)

***சூரிச் மகாநாடு***

**(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி**

(சாகரன்)

**பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!**

(மோகன்)

***தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு***

**பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்**

(சாகரன்)

**இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்**

சாகரன்

**ஈழ விடுதலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும்** - சாகரன்

***அடுத்த கட்டமான அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது***

சிங்கள இராணுவத்திடம்!

எனது தாயார் வீட்டில் இல்லை, எனது சகோதரியைப் பார்ப்பதற்காக மன்னாருக்குச் சென்றவர், திரும்பி வரமுடியாத நிலையில் சண்டை உச்சக் கட்டத்தை அடைய, எனது சகோதரியின் குழந்தைகளைக் காப்பாற்ற அவர்களை அழைத்துக்கொண்டு படகேறி இந்தியா சென்றுவிட்டதாகச் சொன்னார்கள் சகோதரிகள். அன்று மதியம் உணவருந்தி நிம்மதியாக உறங்கினேன் திண்ணையில்! நானும் இந்தியா செல்ல வேண்டும், அம்மாவைப் பார்க்க வேண்டும், இந்தப் புலிவிலங்குகளிடமிருந்து தப்பித்தால்தான் இந்தியா செல்லலாம், அதற்குப பணம் வேண்டும், எனது முதலாளி கொடுத்த தங்கச் சங்கிலி இருந்தது. அதை விற்று படகுக்குக் கொடுக்கத்தான் சரியாக இருக்கும். எதற்கும் உழைத்துக் கொஞ்சம் பணம் சேர்த்துக் கொண்டு இந்தியா செல்வோம் என்று தீர்மானித்தேன்.

மறுநாள் காலையில் எனது உறவினரான முதலாளியிடம் செல்வதென்று தீர்மானித்து அன்று இரவு முழுவதும் விழித்துக்கொண்டே கனவுகளுடன் உறவாடிக் கொண்டிருந்தேன். காலையில் உடலுக்கு நல்லெண்ணை தேய்த்து, சீயக்காய் வைத்து முழுகினேன். காலை உணவை முடித்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன் எனது உறவினர் வீட்டுக்கு.

(தொடரும்…)

அமைதி சமாதானம் ஜனநாயகம்
www.sooddram.com

*[திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே]*

- அ.வரதராஜப்பெருமாள்

***மலையகம் தந்த பாடம்***

[வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா?] - சாகரன்

*[ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!]* - அ.வரதராஜப்பெருமாள்